RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s-22267

# வளையாபதி உணர்த்தும் வாழ்வியல் அறம்

ப. சிவாஜி [அ, *], க. தமிழ்மாறன் [அ]

[அ] தமிழாய்வுத் துறை, அரசு கலைக் கல்லூரி, அரியலூர்-621713, தமிழ்நாடு, இந்தியா

# Virtue of life as expressed by Valaiyapathi

**P. Sivaji [a, *], K Tamilmaran [a]**

[a] Department of Tamil, Government Arts and Science College, Ariyalur-621713, Tamil Nadu, India

* Corresponding Author: sivaji6396@gmail.com

Received: 11-09-2022
Revised: 27-10-2022
Accepted: 05-11-2022
Published: 01-12-2022

Check for updates

**ABSTRACT**

Epic occupies a very high place in Tamil literature. Countless epics have appeared and continue to grow to till today. In Tamil Epic is called serialization. It is divided into perungappiyam and Sirukappiyam. Life virtues are very necessary for today's practical life. An abundance of virtues are found in Valaiyapathi one of the five epics of Tamil literature. It can be known from the speeches of the narrators that Epic Valayapathi was very popular at one time. Valayapathi explains in detail the virtues of a chaste heroine, the benefits of bearing children, the sin of stealing, telling lies, killing other living beings, etc. Valayapathi clarifies the impermanence of youth and impermanence of wealth. Valayapathi expounds various virtues to improve human life. This article tries to explain the basic virtues required for life through Valayapathi.

**Keywords:** Epic, Tamil Literature, Valayapathi, Heroine

## முன்னுரை

தமிழ் இலக்கியங்களில் காப்பியம் மிக உயர்வான இடத்தைப் பெற்றுள்ளது. எண்ணற்ற காப்பியங்கள் தோன்றி இன்றுவரை வளர்ந்து வருகிறது. காப்பியம் என்பது தொடர்நிலைச் செய்யுள் என்று அழைக்கப்படுகிறது. இதனைப் பெருங்காப்பியம் என்றும் சிறுகாப்பியம் என்றும் பகுத்துள்ளனர். ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றாக வளையாபதிக் காப்பியம் அமைந்துள்ளது. இன்றைய நடைமுறை வாழ்விற்கு வாழ்வியல் அறங்கள் மிகமிக தேவையானதாக உள்ளன. ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான வளையாபதியில் மிகுதியான அறக்கருத்துக்கள் காணப்படுகின்றன. வளையாபதிக் காப்பியம் ஒரு காலத்தில் மிகவும் புகழோடு விளங்கியதை உரையாசிரியர்கள் உரைகளின் வாயிலாக அறியமுடிகிறது. கற்புடைய தலைவியின் நற்பண்புகளையும், குழந்தைச் செல்வத்தின் பயனையும், களவு செய்தல், பொய்சொல்லுதல், பிற உயிர்களைக் கொல்லுதல் போன்றவற்றால் ஏற்படும் பாவத்தினையும் வளையாபதி விரிவாக எடுத்துரைக்கிறது. இளமை நிலையாமை, செல்வம் நிலையாமை போன்ற நிலையாமைக் கருத்துக்களையும் வளையாபதி தெளிவுற எடுத்து இயம்புகிறது. மனித வாழ்க்கை மேலும் மேன்மையுற வளையாபதி பல்வேறு அறங்களை எடுத்துரைக்கிறது. வாழ்வியலுக்குத் தேவைப்படும் அடிப்படையான அறங்களை வளையாபதி வாயிலாக இக்கட்டுரை விளக்க முற்படுகிறது.

## வளையாபதி - அறிமுகம்

ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றாக வளையாபதிக் காப்பியம் அமைந்துள்ளது. இக்காப்பியத்தின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இது ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதப்படுகிறது. இது ஒரு சமண சமய நூலாகும். 72-பாடல்கள் மட்டும் தொகுக்கப்பட்டு பதிப்பிக்கப்பட்டுள்ளன. நவகொடி நாராயணன் என்ற வைசியன் வேறுகுலப் பெண்ணை மணந்து கொள்கிறான். அதனால் அவனைச் சார்ந்தோர் வெறுக்கவே, மனைவியை விட்டு அயல்நாடு சென்று விடுகிறான். அந்த பெண்ணுக்குப் பிறந்த மகன் பெரியோனாகி, பல்லாண்டுகள் கழித்து, புகார் நகரம் புகுந்து தன் தந்தையைக் கண்டுபிடித்துத் தாயோடு சேர்க்கிறான் என்பது இக்காப்பியத்தின் கதைச் சுருக்கமாகும். இக்காப்பியம் அறம், பொருள், இன்பம், வீடு என்ற உறுதிப் பொருள் நான்கினுள் அறத்தைத் தலையாயதாகக் கூறுகிறது. மனித இனம் அமைதியாகவும், அன்பாகவும் வாழ்வதற்கு அறம் வழிவகுக்கின்றது. எந்த ஒரு தீயச் செயல்களுக்கும் ஆட்படாமல் நல்வழியில் நடப்பது அறமாகும்.

## கற்புடை மகளிர்

தலைவன் தலைவி இருவரும் ஒத்த அன்பினால் கூடி வாழ்கின்ற இல்லறவாழ்க்கை உயர்ந்த வாழ்கையாகும். தலைவன் தலைவி மனம் இயைந்து வாழ்கின்ற இல்லற நெறியையும், சிறப்பையும் தாம் வாழ்கின்ற ஊரும், நாடும் புகழ்ந்து பாராட்டும்படி வாழ்தல் சிறந்த அறவாழ்வாகும். “நாடும் ஊரும் புகழ்கின்ற புகழ்ச்சி இருவருக்கும் பொதுவாயினும் அப்புகழுக்குக் காரணமாயிருப்பது தலைவியேயாவாள். பெய்க என்று ஏவிய துணையானே பெய்தற்குக் காரணமான தெய்வத்தன்மையும் பெருமைமிக்க கற்புடைய தலைவிக்காகும்” என்று வளையாபதி கற்புடை மகளிர் மாண்பை உரைக்கின்றது” இதனை,

“நாடு மூரு நனிபுகழ்ந் தேத்தலும்

பீடு றும்மழை பெய்கெனப் பெய்தலும்

கூட லாற்றவர் நல்லது கூறுங்காற்

பாடு சான்மிகு பத்தினிக் காவதே” (Somasundaranar, 2021)

என்ற வளையாபதி பாடல் உணர்த்துகிறது. இல்வாழ்க்கையில் தலைவியின் கற்பு என்னும் திண்மையோடு கலங்கா நிலை இருக்குமானால் அத்தலைவியினும் பெருமையுடையவை வேறு என்ன இருக்கிறது என்பதை,

“பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்

திண்மைஉண் டாகப் பெறின்” (Varadharasanar, 2014)

என்ற குறள் தெளிவுறுத்துகின்றது. அத்தலைவியின் கற்பென்னும் திண்மை போன்று பெருமையுடையவை வேறு இல்லை என்பதை,

“இல்லாள் அகத்திருக்க இல்லாதது ஒன்றில்லை” (மதுரை - பா.21:1)

என்று மூதுரை உணர்த்துகின்றது. இல்வாழ்க்கையில் நல்ல பண்புகளும், செயல்களும் நிறைந்த தலைவி வீட்டில் இருக்கையில் இல்லாதது ஒன்றுமில்லை என்றதால் அவ்வீட்டில் எல்லா நலங்களும் நிறைந்திருக்கும் என்பது பொருளாகும். புகழ்மிக்க இல்லறவாழ்க்கை சிறப்போடு அமைவதற்கு தலைவியின் நற்பண்புகள் அடிப்படையாக அமைகின்றன. ஆதலால் இல்லறவாழ்கையில் பெருமைமிக்க சிறப்பினையுடைவள் கற்புடைய தலைவிதான் என்பதனைத் தமிழ் இலக்கியங்கள் தெளிவுறுத்துகின்றன.

## மக்கட் பேறு

இல்வாழ்க்கைக்கு பெறும் மகிழ்வைத் தருவது குழந்தைச் செல்வம் ஆகும். அதிலும் நல்ல மக்களைப் பெற்று இல்லற நெறியில் வாழ்வதைவிட புகழ்மிக்க வாழ்க்கை வேறு இல்லை. “சிறந்த நூல்களைக் கற்று உணர்ந்த அறிவுடையாரிடம் பொறுமையில்லாமையும், இன்பந்தரும் புணர்ச்சிபெறாத இளமைப் பருவமும், ஆடையில்லா ஒப்பனையினது தூய தன்மையும், மணமில்லாத மலர்மாலையும், நுண்ணியநூல் பலவும் கற்றிலாத புலமைத் தன்மையும், நல்ல நீர் நிலைகள் இல்லாத நகரமும் இவை அனைத்தும் மகப்பேறில்லாதவருடைய செல்வம் போன்று சிறிதும் பயனற்றதாகும்” என்றுரைக்கிறது வளையாபதி இதனை,

“பொறையிலா அறிவு போகப்

புணர்விலா இளமை மேவத்

துறையிலா வனச வாவி

துகில் இலாக் கோலத் தூய்மை

நறையிலா மாலை கல்வி

நலமிலாப் புலமை நன்னீர்ச்

சிறையிலா நகரம் போலும்

சேயிலாச் செல்வ மன்றே” (Somasundaranar, 2021)

என்ற வளையாபதி பாடல் உணர்த்துகிறது. மேலும், மக்கள் செல்வம் இல்லாத இல்வாழ்க்கை நிலையை கூறுவதிலிருந்து குழந்தைச் செல்வத்தின் மாண்பினை உணரமுடிகிறது. “எல்லாச் செல்வ வளங்களைப் பெற்றிருந்தாலும் பலரோடு கூடி இருந்து உண்ணுகின்ற சுற்றமும், நட்புமாகிய பல செல்வங்கள் இருந்தாலும், தத்தித் தவழ்ந்தும், தடுமாறி நடந்தும், தனது அழகிய சிறிய கைளை நீட்டியும், உண் கலத்தில் உள்ள உணவைத் தொட்டு எடுத்தும், வாயில் போட்டும், கையால் துழாவியும், நெய்யாலான அந்தச் சோற்றை அள்ளித் தன் உடலெல்லாம் வாரி இறைத்துக் கொண்டு விளையாடும் பெற்றவர்களை அன்பால் மயங்கச் செய்யும் பிள்ளைகள் இல்லாதவர்களுக்கு இப்பிறவியில் பெற்ற பயன் ஒன்றுமில்லை” என்பதை,

“படைப்புப் பலபடைத்துப் பலரோடு உண்ணும்

உடைப்பெரும் செல்வர் ஆயினும் இடைப்படக்

குறுகுறு நடந்து சிறுகை நீட்டி

இட்டும் தொட்டும் கவ்வியும் துழத்தும்

நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்

மயக்குறு மக்களை இல்லோர்க்குப்

பயக்குறை இல்லைத் தாம்வாழும் நாளே” (Manikkavasagan, 2019)

என்ற புறநானூற்றுப் பாடல்வழி அறியமுடிகிறது. இல்லறவாழ்க்கையில் சுற்றமும், நட்பும் கூடிய எல்லாச் செல்வ வளங்கள் இருந்தாலும் பெற்றோர்க்குக் குழந்தைகள் தரும் இன்பம்தான் குறைவில்லாப் பேரின்பமாகுமென்று வளையாபதி வலியுறுத்துகின்றது.

## கள்ளாமை

தமக்கு உரிமை இல்லாத ஒரு பொருளை பிறர் அறியாவண்ணம் எடுத்தல் களவு எனப்படும். இது சான்றோர்களால் பழிக்கப்படும் செயலாகும். களவு செய்து வாழ்பவர் உள்ளத்தில் அறம் தங்காது நெஞ்சில் வஞ்சம் இருக்கும். “பிறர் கைவிடுதலில்லாத பல்வேறு பொருள்களை மறைவாக களவு

கொள்ளுதல் பாவம். நீ களவு கொண்டதன் பயன் இதுவே என்று சொல்லி செங்கோன் மன்னவன் கள்வரைத் தன் மறவர்களால் பிடித்துத் தப்பி ஓடிவிடாதபடி அவர்தம் கால்களையும் கைகளையும் கட்டித் தளையிட்டு அவர் நெஞ்சம் பதறும்படி துன்புறுத்துவான்" என்பதை,

"பீடில் செய்திக ளாற்கள விற்பிறர்

வீடில் பல்பொருள் கொண்ட பயனெனக்

கூடிக் காலொடு கைகளைப் பற்றிவைத்

தோட லின்றி யுலையக் குறைக்குமே" (Somasundaranar, 2021)

என்ற வளையாபதி பாடல் உணர்த்துகிறது. களவு செய்பவர்களுக்கு அரச தண்டனையால் உடம்பும் துன்புற்றுத் தவறிப்போகும். களவு செய்யாதவர்களுக்குத் தேவருலகம் தப்பாது கிடைக்கும் என்பதை,

"கள்வார்க்குத் தள்ளும் உயிர்நிலை கள்ளார்க்குத்

தள்ளாது புத்தேள் உலகு" (Varadharasanar, 2014)

என்ற திருக்குறள் உணர்த்துகிறது புலால், கொலை, களவு ஆகியவற்றை விலக்க வேண்டுமென்பதை,

"புலையும் கொலையும் களவும் தவிர்" (Sivasankaran, 2018)

என்று கொன்றை வேந்தனும் உணர்த்துகின்றது. களவு செய்யும் பொருள் எல்லாம் பெருகுவது போலத் தோன்றி பின் களவு செய்வார் தம்மையும் சேர்த்து அழிக்கும் அளவிற்குக் களவு கொடுமையானதாகும். களவு மனம் இல்லாமல் வாழ்பவன் நெஞ்சில் அறம் நிலைத்திருக்கும் என்பதை வளையாபதி வற்புறுத்துகின்றது.

## பொய்யாமை

பொய்யாமை என்பது எல்லா அறங்களுக்கும் முதன்மையானது. அறம் செய்ய விரும்புவோரும் அறத்தின்படி வாழத்தலைப்படுவாரும் முதலில் கடைப்பிடிக்க வேண்டிய அறம் பொய்யாமையாகும். "பொய் கூறுவதிலிருந்து அனைவரும் விலக வேண்டும். பொய்யாமை என்னும் அணிகலனை எப்பொழுதும் அணிந்துகொண்டு நாள்தோறும் நன்னெறியிலே நின்று நல்லறங்களை செய்ய வேண்டும். அறஞ்செய்து வாழுபவர் தம் வாழ்நாளில் தமக்கு இம்மையினும் இனிது வாழ்ந்து மறுமையினும் துன்பமில்லாத சொர்க்கத்தை அடைதல் உண்மைச் சான்றோர்தம் மெய்க் காட்சியாம்" என்று வளையாபதி உணர்த்துகின்றது. இதனை,

"பொய்யி னீங்குமின் பொய்யின்மை பூண்டுகொண்

டைய மின்றி யறநெறி யாற்றுமின்

வைகல் வேதனை வந்துற லொன்றின்றிக்

கௌவை யில்லுல கெய்துதல் கண்டதே" (Somasundaranar, 2021)

என்ற வளையாபதி பாடல் குறிப்பிடுகிறது. "யாம் உண்மையாகக் கண்டறிந்தவற்றுள் வாய்மையைவிட எத்தன்மையாலும் சிறந்தவைகளாகச் சொல்லத்தக்க பிற அறங்கள் இல்லை" என்பதை,

"யாம்மெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்

வாய்மையின் நல்ல பிற" (Varadharasanar, 2014)

என்று திருவள்ளுவர் மெய்ப்பிக்கிறார். செய்யப்படுகிற அறங்கள் எல்லாவற்றுக்கும் முதன்மையானது பொய்யாமை என்னும் வாய்மையே ஆகும். பொய்கூறாது வாழ்பவர்களுக்கு இம்மையும் மறுமையும் இன்பம் கிடைக்கும் என்று வளையாபதி தெரிவிக்கிறது.

## கொல்லாமை

அறநெறியில் வாழத் தொடங்கிய ஒருவன் எந்நிலையிலும் பிற உயிர்களைத் துன்புறுத்தக்கூடாது. பிற உயிர்களைத் துன்புறுத்தி வாழ்தல் கொடிய செயலாகும். தான் வாழ்தல் வேண்டி பிறஉயிர்களைக் கொன்று உண்ணுதல் பெரிய பாவமாகும். மெய்யுணர்வுடைய சான்றோர் உலகினரை நோக்கி "நீங்கள் இவ்வுலகுள்ள வரையில் அதனொடு இணைந்து நிற்கும் உயரிய புகழோடு நின்று நிலவுதல் வேண்டுவீர்கள் என்றால் அல்லது நிலைத்தல் இல்லாத நால்வகைப் பிறப்பில் பிறந்து துன்புற்று நெஞ்சு தடுமாறுதற்குக் காரணமான எண்ணிறந்த துயரங்களை அஞ்சி சொர்க்கமாகிய வீடு பெற விரும்பினீர்கள் என்றால் பிற உயிரினங்கள் அஞ்சும் கொலைத் தொழிலை செய்யாது விடுதல் வேண்டும்" என்பதை,

"உலகுஉடன் விளங்கஉயர் சீர்த்திநிலை கொள்ளின்

நிலையில்கதி நான்கின் இடை நின்றுதடு மாறும்

அலகில்துயர் அஞ்சின்உயிர் அஞ்சவரும் வஞ்சக்

கொலைஒழிமின் என்றுநனி கூறினர் அறிந்தார்" (Somasundaranar, 2021)

என்ற வளையாபதி பாடல் உணர்த்துகிறது. கொல்லாமையாகிய அறத்தை உறுதியாகப் பற்றி வாழ்பவன் வாழ்நாள்மேல் உடலினின்று உயிரைப் பிரிக்கும் கூற்றுவன் செல்லமாட்டானென்பதை,

"கொல்லாமை மேற்கொண்டு ஒழுகுவான் வாழ்நாள்மேல்

செல்லாது உயிருண்ணும் கூற்று" (Varadharasanar, 2014)

என்கிறார் வள்ளுவர். ஆதலால் கொல்லாமை என்னும் அறமே அறங்களிலெல்லாம் தலைசிறந்ததாகும். அவ்வறமே இம்மை பயனையும் வீடு பேற்றினையும் ஒரு சேரத் தரவல்லதாகுமென்று வளையாபதி உயர்வு செய்கின்றது.

## செல்வம் நிலையாமை

வாழ்க்கைக்கு செல்வம் மிகவும் அடிப்படையான ஒன்றாகும். போதிய அளவு இல்லாதபோது வாழ்வே மிகவும் வருத்தம் உடையதாக ஆகிவிடும். செல்வம் ஓரிடத்தில் நிலைபெற்றிருப்பதில்லை. ஆதலால் நிலையில்லா செல்வத்தின் மீது மிகுந்த பற்று தேவையில்லை. "செல்வமானது வெள்ளமும், மறதியும், வெற்றியுடைய வேந்தரும், நெருப்பும், தாயத்தாரும், கள்வரும் என்று கூறப்படுகின்ற இந்த ஆறு வழிகளாலும் அழிந்து போகும். இயல்புடையதாகும். நிலையில்லாத பொருள் மேல் பற்றுவைக்காமல் சான்றோர் அவற்றைத் துறந்து வாழ்வார். பிறர் இகழ்தற்குக் காரணமான பெரிய துயரங்களைச் செய்யும் பிறவிப் பிணியாகிய துன்பத்தை நீங்கி வாழ்வர்" இதனை,

"வெள்ள மறவி விறல்வேந்தர் தீத்தாயம்

கல்வர்என்று இவ்வாறிற் கைகரப்பத் தீர்ந்தகலும்

உள்ளில் ஒரு பொருளை ஒட்டாது ஒழிந்தவர்

எள்ளும் பெருந்துயர்நோய் எவ்வம் இகப்பவோ" (Somasundaranar, 2021)

என்ற வளையாபதி பாடல் குறிப்பிடுகிறது. அழிவில்லாத நல்ல தருமங்களைச் செய்யாதவர்களாகியும், யாசகர்களுக்குக் கொடாதவர்களாகியும், பொருளைச் சேர்த்து வைப்பவர்களள் செல்வம் உறுதியாக அதனை ஒருநாள் இழந்தே விடுவார்கள். இதற்கு பற்பல மலர்களினின்றும்

தேனைக் கொண்டு வந்து கூட்டிலே சேர்த்துவைக்கும் தேனீ நல்ல சான்றாகும். தேன் கூட்டினின்றும் தேனைப் பிறர் எடுத்துக் கொள்வதுபோல அவனுடைய அவ்வளவு பொருளையும் எவரேனும் ஒரு நாள் கவர்ந்து கொண்டு போய் விடுவார் என்பதை,

"உடாஅதும், உண்ணாதும், தன் உடம்பு செற்றும்

கெடாஅத நல்லறமும் செய்யார் - கொடாஅது

வைத்தீட்டி னாரிழப்பர் வான்தோய் மலைநாட

உய்த்தீட்டும் தேனீக் கரி" (Puliyur Kesigan, 2013)

என்று நாலடியார் பாடல் குறிப்பிடுகிறது. நிலை இல்லாத செல்வத்தைப் பலருக்கு உதவி செய்து வாழ்ந்தால் நிலைத்தப் புகழை அடையமுடியுமென்று வளையாபதி தெரிவிக்கின்றது.

## இளமை நிலையாமை

மனித வாழ்க்கையில் இளமையும், இன்பம் நிலையில்லாததாகும். அதனைப் பாதுகாத்தாலும் அடுத்த பிறவிக்குக் கிடைத்திடாது. இப்பிறவியில் கிடைத்த இவற்றைக் கொண்டு நல்லறங்களைச் செய்ய வேண்டும். "இன்பநுகர்தற்குரிய இளமைப் பருவம் நிலையில்லாதது ஆகும். நுகரும் இன்பங்கள் நிலை இல்லாததாகும், அவ்வின்பத்திற்குக் காரணமான செல்வங்களும் நிலையானவை இல்லை. ஆதலால் இளமையும், இன்பமும், வளமையும் நிலைத்தனவென்று இருத்தல் வேண்டாம். முன்பு விளைந்த நிலத்தில் உள்ள பயிர்களிடமிருந்து விதையினை எடுத்து மறுபடியும் பயிர் செய்வது போல இளமையிலேயே அறமாகிய வித்தினை செய்து வாழ வேண்டும்" என்பதை,

"இளமையும் நிலையாவால் இன்பமும் நின்ற அல்ல

வளமையும் அஃதேபோல் வைகலும் துன்பவெள்ளம்

உளவென நினையாதே செல்கதிக்கு என்றும்என்றும்

விளைநிலமே உழவார்போல் வித்துநீர் செய்துகொண்மீன்" (Somasundaranar, 2021)

என்னும் வளையாபதி பாடல் மூலம் அறியமுடிகிறது. மரங்களிலே முதிர்ச்சியுற்றிருந்த கனிகள் மட்டுமே அல்லாமல் நல்ல காய்களும் கடுங்காற்றினால் உதிர்ந்து போதலுமு நிகழ்வதுண்டு. அதுபோல முதியவர்கள் மட்டுமல்லாமல் இளமைப் பருவத்தினரும் இறந்து போதல் நிகழ்வது உண்டு. ஆதலால் இளமை நிலையற்றது என்பதை உணர்ந்து உடனே தருமஞ்செய்வதிலே ஈடுபடுங்களென்று,

"மற்றறிவாம் நல்வினை யாம் இளையம் என்னாது

கைத்துண்டாம் போழ்தே கரவாது அறஞ்செய்ம்மின்

முற்றி இருந்த கனியொழியத் தீவளியால்

நற்காய் உதிர்தலும் உண்டு" (Puliyur Kesigan, 2013)

என்று நாலடியார் உணர்த்துகின்றது. இப்பிறவியில் கிடைத்த மனித வாழ்க்கையில் நல்லறங்களைச் செய்து அடுத்த பிறவிக்கான புண்ணியத்தைச் சேர்த்திட வேண்டும். நிலையில்லாத இளமைப் பருவத்தில் நல்ல அறங்களைச் செய்து நிலையுடையதான புகழோடு வாழ்வதே சிறந்த வாழ்க்கையாகுமென்று வளையாபதி வற்புறுத்துகிறது.

## முடிவுரை

உறுதிப்பொருள்கள் நான்கனுள் முதன்மையாக இருப்பது அறமாகும். அறத்தின் வழியே பொருளையும், இன்பத்தையும் பெருபவனுக்கு வீடு பேறு இயல்பாக அமைந்திடும். புகழ்மிக்க இல்லறவாழ்க்கை சிறப்போடு அமைவதற்கு கற்புடைய தலைவியின் நற்பண்புகள் அடிப்படையாகும்.

பெற்றோர்களுக்குக் குழந்தைகள் தரும் இன்பம் குறைவில்லாப் பேரின்பமாகும். களவு மனம் இல்லாமல் வாழ்பவன் நெஞ்சில் அறம் நிலைக்குமென்றாலும் பொய்கூறாது வாழ்பவர்களுக்கு இம்மையும் மறுமையும் வீடு பேற்றையும் தரும். நிலையில்லாத செல்வத்தைக் கொண்டு பலருக்கும் உதவி செய்து வாழ்ந்தால் நிலைத்தப் புகழை அடைய முடியும். நிலையில்லா இளமைப் பருவத்தில் நல்ல அறங்களைச் செய்து நிலைத்தப் புகழோடு வாழவேண்டும். ஒவ்வொரு மனிதனுக்கும் அறச்சிந்தனைகள் இயல்பாக அமைந்திட வேண்டும் என்று வளையாபதி வற்புறுத்துகிறது. மனித வாழ்க்கையின் மேன்மைக்கும் சமுதாய முன்னேற்றத்திற்கும் அடிப்படையாக அமைவது தனிமனித வாழ்வியல் அறங்கள்தாம் என்று வளையாபதி ஓங்கிச் சொல்கின்றது. மனித வாழ்க்கைக்கு தேவையான வாழ்வியல் அறங்களை எடுத்து இயம்பியுள்ள வளையாபதிக் காப்பியம் என்றென்றும் போற்றுதலுக்குரியதாகும்.

## References


Manikkavasagan, G. (2019) Purananuru Moolamum Uraiyum, Uma Pathippagam, Chennai, India

Puliyur Kesigan, (2013) Naladiyar, Saradha Pathipagam, Chennai, India

Sivasankaran, V. (2018) Ovvaiyamutham, Manivasakar Pathipagam, Chennai, India

Somasundaranar, P.V. (2021) Valaiyapathi Kundalakesi, Saiva Siddhanta Works Publishing Society, Tinnevelly, Limited, Chennai, India

Varadharasanar, M. (2014) Thirukkural Thelivurai, Saiva Siddhanta Works Publishing Society, Tinnevelly, Limited, Chennai, India



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author's has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author's 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License